**செய்தி வெளியீடு எண் : 1554** **நாள் : 08.09.2022**

கர்நாடக மாநிலம், பெங்களூர் தாஜ் வெஸ்டட் ஹோட்டல் வளாகத்தில், ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை (மன்ந்தன்) அனைத்து மாநில நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்கள் மாநாட்டில், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்களின் உரை.

இன்று (8.9.2022) கர்நாடக மாநிலம், பெங்களூர் தாஜ் வெஸ்டட் ஹோட்டல் வளாகத்தில், மாண்புமிகு ஒன்றிய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.நிதின் கட்கரி அவர்கள் தலைமையில் நடைபெற்ற (மன்ந்தன்) அனைத்து மாநில நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்கள் மாநாட்டில், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் கலந்துக் கொண்டு உரையாற்றினார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உரையாற்றுகையில், தமிழ்நாட்டில், நீண்டகாலமாக நிலுவையில் உள்ள, சென்னை துறைமுகம்–மதுரவாயல் இரண்டு அடுக்கு உயர்மட்ட மேம்பால சாலைக்கு, 26.5.2022 அன்று, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது என்றும், தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை, சுமார் 64,000 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை பராமரித்து வருகிறது. தமிழகத்தில் சாலை வசதிகளை மேம்படுத்த தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மாவட்டம் மற்றும் தாலுக்கா தலைமையகங்களை இணைக்கும் முக்கியமான மாநில நெடுஞ்சாலைகளை **2026 ஆம் ஆண்டிற்குள் ''முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்''** போக்குவரத்து செறிவின் அடிப்படையில், சுமார் 2200 கிலோ மீட்டர் தூரத்திற்கு 4 வழிச்சாலையாகவும் மற்றும் 6700 கிலோ மீட்டர் தூரத்திற்கு, 2 வழிச்சாலையாகவும் விரிவுபடுத்தப்படும் எனவும், தமிழ்நாட்டில், தற்போதுள்ள 1280 தரைப்பாலங்களும், 2026 ஆம் ஆண்டிற்குள், உயர்மட்ட பாலங்களாக மாற்றப்படும் என்றும், போக்குவரத்து நெரிசலை குறைக்க, நகராட்சிகளுக்கு புறவழிச்சாலை அமைக்கப்படும் என்று தெரிவித்தார்.

மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் பிற மாவட்டச் சாலைகளில் உள்ள இரயில்வே லெவல் கிராசிங்குகளுக்கு, முன்னுரிமை அடிப்படையில் சாலை மேம்பாலமாக மாற்றப்படுகின்றன.

தமிழ்நாட்டின், 10,000 கிலோ மீட்டர் பஞ்சாயத்துச் சாலைகள் / பஞ்சாயத்து யூனியன் சாலைகள், ஐந்து ஆண்டுகளில், பிற மாவட்டச் சாலை தரத்திற்கு மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 18.11.2021 அன்று நடைபெற்ற சாலைப் பாதுகாப்புக் கூட்டத்தில், ''இன்னுயிர் காப்போம் திட்டம்'', நம்மை காக்கும் 48, சீரான சாலைகள் ஆகிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார் என்பதைத் தெரிவித்து, சாலைப் பாதுகாப்பு செயலாக்கத்திற்காக சிறப்புப் பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, **''விபத்தில்லா தமிழ்நாடு''** உருவாக்க, 15.12.2021 அன்று **''சாலைப் பாதுகாப்பு பொறியியல்''** குறித்த சிறப்பு தொடர் பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டு, 335 பொறியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர் என தெரிவித்த அமைச்சர் அவர்கள், பள்ளிகளுக்கான சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி, 23.8.2022 அன்று தொடங்கப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

அதிவேகமாக செல்லும் வாகனங்களை, கண்காணிக்க கிழக்கு கடற்கரை சாலையில், தானியங்கி வேக அமலாக்க அமைப்பு மற்றும் மேம்பட்ட போக்குவரத்து மேலாண்மை அமைப்பு நிறுவப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்.

ஒன்றிய அமைச்சகத்தின் ஆதரவைப் பாராட்டும் அதே வேளையில், தமிழ்நாட்டில், ஒரு சில முக்கியமான திட்டங்களை விரைவாக செயல்படுத்துமாறு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொண்டார்.

சென்னை – கன்னியாகுமரி சாலையை ஆறு / எட்டு வழிச்சாலையாக மேம்படுத்துவது இன்றியமையாததாகின்றது.

மாமல்லபுரம் கடற்கரை கோயில் மற்றும் தஞ்சாவூர் பெரியகோயில் ஆகிய இரண்டு கோயில்களும், யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளங்கள் மற்றும் சுற்றுலாத்தலங்கள் ஆகும். இதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, தேசிய நெடுஞ்சாலைக்கான இணைப்புச் சாலைகளை மேம்படுத்த சிறப்பு நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சாலைப் பாதுகாப்பின்கீழ், மாநிலச் சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள் சந்திக்கும், சந்திப்புகளை மேம்படுத்த சிறப்பு நிதியை அனுமதிக்கவும், விலைமதிப்பற்ற உயிர்களைக் காப்பாற்ற தமிழக அரசுக்கு ஆதரவை வழங்கவும் கேட்டுக் கொண்டார்.

ஒப்பந்தங்களில் இருந்து எழும் கூடுதல் உரிமைகோரல்கள் மற்றும் நில எடுப்பு செலவில் உள்ள வேறுபாடு போன்றவை, NHAI போன்று, ஒன்றிய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சக நிதியிலிருந்து, பூர்த்தி செய்யப்பட வேண்டும். மாநில அரசின் முகவர் கட்டணங்களில் கழிப்பதிலிருந்து, விலக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்திய அரசாங்கத்தின் நிதியைப் பயன்படுத்தி, இரு வழித் தடச் சாலையாக, மேம்படுத்தப்படுகின்ற சாலைகள் சுங்கக் கட்டணம் வசூலிக்கும் நிலையை கணிசமாக அடையாததால், பொது மக்களிடையே போரட்டங்களும், எதிர்ப்புகளும் எழுந்துள்ளது என்று குறிப்பிட்ட அமைச்சர் அவர்கள், ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் அவர்களிடம், சுங்கக் கட்டணத்திலிருந்து விலக்களிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இந்த மாநாட்டில், மாண்புமிகு ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் திரு.நிதின் கட்கரி அவர்கள், மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் திரு.பசவராஜ் பொம்மை அவர்கள், மாண்புமிகு ஒன்றிய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் அமைச்சர் திரு.வி.கே.சிங் அவர்கள், ஒன்றிய சாலை போக்குவரத்து நெடுஞ்சாலைத்துறை செயலாளர் ஸ்ரீ கிரிதர் அரமனே இ.ஆ.ப.,, தேசிய நெடுஞ்சாலை ஆணையத் தலைவர், திருமதி.அல்கா உபாத்யாயா, தேசிய நெடுஞ்சாலை ஆணைய உறுப்பினர், திரு.ஆர்.கே.பாண்டே, ஐஐடி மும்பை பேராசிரியர் திரு.ரவி சின்ஹா, தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைகள் & சிறுதுறைமுகங்கள் துறை முதன்மைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ் இ.ஆ.ப., மற்றும் ஒன்றிய, மாநில துறை சார்ந்த அதிகாரிகள் கலந்துக் கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in